# வடிவியற்கலை தொடர்பான சுருக்கக் கருத்திலான ஓவியபோட்டி - 2025

அன்புள்ள மாணவர்களே, கணிதத்தின் அழகை உங்களின் வடிவியற்கலை தொடர்பான கலையறிவை கொண்டு உங்களின் எல்லை தாண்டிய கற்பனையின் மூலம் ஓவியத்தை வரைந்து எங்களுக்கு அனுப்பவும், அதனால் நாங்கள் உங்களின் கலைத்திறனை பாராட்டி, அதில் அழகில் சிறந்த மற்றும் அர்த்தமுள்ள கலைப்படைப்புக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.

## போட்டியின் நிபந்தனைகள்;

1. இலங்கையில் வசிக்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும் மற்றும் ஒரு மாணவரால் 14in×18in அளவுள்ள ஒரு வரைபடத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
2. உலர்திறன் கடினமான, உலர்ந்த வண்ணப்பூச்சுகளைத் தவிர, எந்த விருப்பமான ஊடகத்தையும் பயன்படுத்தலாம். வட்டங்கள், முக்கோணங்கள், செவ்வகங்கள் மற்றும் எளிய வடிவங்கள் போன்ற வடிவங்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.
3. சமர்ப்பிக்கப்பட்ட வரைபடம் இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், சரிபார்ப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக உங்களின் உண்மையான வரைபடத்தை அதிபர், துணை அதிபர் ஆகியோரின் உறுதிப்படுத்திய சான்றிதழுடன் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4. கலைப்படைப்பு உங்களின் உண்மையான படைப்பாக இருக்க வேண்டும். இது வேறு எந்த போட்டிக்கும் சமர்ப்பிக்க ப்படாத, பழையபடைப்பொன்றை மீளுருவாக்கபடாத மற்றும் வேறொருவர் அமைத்துத்தரவும் முடியாத ஒன்றையே சமர்ப்பிக்க வேண்டும்.
5. போட்டியில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வரைபடங்களும் BRAINSTORMER FOUNDATION ஆல் பதிப்புரிமை பெற்றவை., மேலும் அவை மீள பெறப்பட முடியாது.
6. வெற்றியாளர்களை நடுவர் குழுவே முடிவு செய்யும், நடுவர்களின் முடிவே இறுதியானது.

## உங்கள் வரைபடங்களை அனுப்பும் முறை;

- போட்டியில் பங்கேற்க, கலைப்படைப்பை ஸ்கேன் செய்து (JPEG வடிவத்தில், 5MBக்கு மிகையாகாமல்) http://www.brainstormermath.org/competition என்ற இணையதளத்தில் பொருத்தமான விவரங்களுடன் 2025 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதிக்கு முன் பதிவேற்றவும்.
- பின்வரும் விவரங்கள் இணையதளத்தில் நிரப்பப்பட வேண்டும் - போட்டியாளரின் முழு பெயர், போட்டியாளரின் பிறந்த திகதி, முகவரி, பாடசாலை, அதன் முகவரி, தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்.

## பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள்;

- 1வது, 2வது மற்றும் 3வது இடங்களுக்கு ரூ.50,000 । ரூ.30,000 । ரூ.20,000 மதிப்பான பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- தகுதி பெற்ற 25 மாணவர்களுக்கு சான்றிதழ்களும், 50 மெரிட் சான்றிதழ்களும் வழங்கப்படும்
- விருது வழங்கும் விழா 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி **கொழும்பு பொது நூலக அரங்கத்தில்** நடைபெறவுள்ளது.

அனைத்து பணப் பரிசுகளும் கொமர்ஷல் வங்கியில் வெற்றியாளரின் சேமிப்புக் கணக்குகளில் வரவு வைக்கப்படும். மேலதிக தகவல்களை http://www.brainstormermath.org இல் பெறலாம் அல்லது 0778011622 ற்கு அழைக்கலாம் அல்லது brainstormer.npo@gmail.com க்கு மின்னஞ்சல் செய்யலாம். மார்ச் 14 ஆம் திகதி சர்வதேச கணித தினத்தை நினைவுகூரும் வகையில், **கல்வி அமைச்சின்** அனுமதியுடன் இந்த போட்டியை BRAINSTORMER FOUNDATION ஏற்பாடு செய்துள்ளது.